

திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆவடி மாநகர தி.மு.க. சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் ஆவடி மாநகராட்சி அருகில் உள்ள கலைஞர் திடலில் நடைபெற்றது. இதில் கழக பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் மொழிப்போர் தியாகிகள் படத்திற்கு மலர் துவி மரியாதை செலுத்தி வீரவணக்க நாள் உரையாற்றினார் உடன் முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்பி முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளர் ஆவடி.சாமு.நாசர் எம்.எல்.ஏ , ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, மேயர் ஜி.உதயக்குமார், சி.ஜெரல்டு, பிரபு கஜேந்திரன், சன்.பிரகாஷ், ம.இராஜி, விஜி.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், ஜி.ராஜேந்திரன், பேபிசேகர், ஜி.நாராயணபிரசாத், பொன்.விஜயன், த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர், என்.இ.கே.மூர்த்தி, டி.தேசிங்கு, ஆர்.ஜெயசீலன், புஜ்ஜி.டி. ராமகிருஷ்ணன், ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, சே.பிரேம் ஆனந்த், தி.வை.இரவி, தங்கம் முரளி, தி.வே.முனுசாமி, மாவட்ட மாணவர் அமைப்பாளர் வி.தியாகராஜன், கே.சுரேஷ்குமார், ஒ.ஆர். நாகூர் கனி உள்பட பலர் உள்ளனர்



காஞ்சிபுரத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தலைமை கழக பேச்சாளர் நா.சே.பிர.பாகரன், காஞ்சிபுரம் மாநகர செயலாளர் தமிழ்ச்செல்வன், மேயர் மகாலட்சுமி, எம்.எஸ்.சுகுமார், மற்றும் ஒன்றிய செயலாளர்கள் பகுதி செயலாளர், மாநகர நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள் கலந்து கொண்டனர்

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

# தொழில் முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஜன.26-

சென்னை வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தை (TN BEAT EXPO2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (26.01.2024) காலை 10.30 மணியளவில் தொடங்கி வைக்கிறார்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறை சார்பாக, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) தென்னிந்திய வரலாற்றில் முதல் முறையாக தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கான கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் (TN BEAT EXPO2024) சென்னை வர்த்தக மையத்தில் 26 மற்றும் 27 ஜனவரி 2024ல் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், முன்னிலை வகுக்கவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நலத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ் தலைமை ஏற்கிறார்.

இக்கண்காட்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரால் தயாரிக்கப்பட்ட 8,000க்கும் மேற்பட்ட பொருட்கள் 410 அரங்குகளில் வணிக நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகன உதிரி பாகனங்கள், இரசாயனப்பொருட்கள், மின் மற்றும் மின்னணுவியல், வேளா ண்மைக் கருவிகள், கட்டுமான தொழில்சார்ந்தவர்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் என 187 அரங்குகளும் அரசு பொதுத்துறையை சார்ந்த பூம்புகார் நிறுவனம், தமிழ்நாடு மினரல்ஸ் லிமிட்டேட், சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், ஆவின், போன்ற 28 அரங்குகளில் பொது நிறுவனங்களும், 10 அரங்குகளில் தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகள் பங்கேற்கின்றனர்.

வணிகர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு இடையே நேரடி விற்பனை செய்ய கைவினைப்பொருட்கள் மரஉபயோகப் பொருட்கள், அணிகலன்கள், தரக்கோட்டா பொருட்கள், உணவு மற்றும் குளிர்பானங்கள், இயற்கை உணவு தயாரிப்பு பொருட்கள் போன்றவை 128 அரங்குகள் அமைக்கப் படவுள்ளது. இந்நிகழ்வில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து தொழில்முனைவோர் முதலீட்டா ளர்கள், தொழில் அதிபர்கள், சுயதொழில் செய்பவர்கள், வர்த்தகர்கள், வணிகர்கள் மற்றும் தொழில்துறையைச் சார்ந்த மாணவர்கள் கலந்து கொள்ள உள்ளார்கள்.

இக்கண்காட்சியினால் ஆதிதிராவிடர் பழங்குயின சார்ந்த தொழில் முனைவோர்கள் தங்களது உற்பத்தி பொருட்களை கண்காட்சியில் வைத்து தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்ளவும், ஒன்றியம் மற்றும் மாநில அரசு பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் முன்னணி நிறுவனங்களின் தங்களின் தயாரிப்பு பொருட்களை நேரடி கொள்முதல் செய்வதற்கான வாய்ப்புகளையும், தொழில் முனைவோர் புதிய தொழில் துவங்குவதற்கும் மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் பெறவும், குறு, சிறு தொழிலாளர்கள் தயாரிக்கும் உற்பத்தி பொருட்களை வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான விழிப்புணர்வும், தொழில்துறையில் சிறந்து விளங்கும் சிறப்பு வல்லுநர்களைக் கொண்டு கருத்தரங்கமும் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக தலைவர் உ.மதிவாணன் சிறப்புரை ஆற்றவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறை அரசு செயலாளர் க.லட்சுமி பிரியா வரவேற்புரையாற்றவும், மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி,நன்றியுரை யாற்றயுள்ளார். பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

தி.மு.க இளைஞர் அணி மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று 26–1–2024 (வெள்ளிக்கிழமை) மாலை 4 மணி அளவில், சென்னையில், எனது இல்லத்தில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் மேற்கண்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் வெண் சீருடையில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள் :**

- இரண்டாவது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நாடு முழுவதும் எடுத்துச் செல்லுதல்.
- ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் நிர்வாகிகள் தேர்வு.
- இளைஞர் அணியின் ஆக்கப் பணிகள்.

திமுக இளைஞர் அணி 2வது மாநில மாநாடு 2024
மாநில உரிமை மீட்பு முழக்கம்

அன்பகம்
சென்னை – 18.
நாள் : 25–01–2024.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


### கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# மிஸ்டர் உதயநிதி கிளாசிக் தென்னிந்திய அளவிலான ஆணழகன் போட்டி!

## ஆ.இராசா எம்.பி. - கே.இ.பிரகாஷ் - அ.ரவி பரிசுகள் வழங்கி சிறப்புரை!

கோவை, ஜன.26-

கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி மற்றும் இந்தியன் பிட்னஸ் பெடரேசன் இணைந்து மிஸ்டர் உதயநிதி கிளாசிக் எனும் தலைப்பில் தென்னிந்திய அளவிலான ஆணழகன் போட்டி இன்று (26.01.2024 -வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணி முதல் மேட்டுப்பாளையம், கோஆப்ரேட்டிவ் காலனியில் உள்ள இஎம்எஸ் திருமண மண்டபத்தில் கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எ.ஆர்.கே.ஹக்கீம், துணை அமைப்பாளர்கள் க.நாகராஜ், பி.கே.அருணாச்சலம், வே.சூரியன் தம்பி, உதயநிதி பாபு, எம். மனோஜ் ஆகியோர் முன்னிலையில், மேட்டுப்பாளையம் தெற்கு நகர கழக செயலாளர் ப.முனுசாமி, மேட்டுப்பாளையம் வடக்கு நகர கழக செயலாளர் மு.முகமது யூனுஸ் வரவேற்புரையில் இளைஞர் அணி துணை அமைப்பாளர் விக்கி (எ) ப.விக்னேஷ்குமார் ஒருங்கிணைப்பில் இந்த போட்டிகள் நடைபெற உள்ளன.

இந்த ஆணழகன் போட்டியில் கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி பாராருமன்ற உறுப்பி னர் ஆ.ராசா, கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், மேற்கு மண்டலப் பொறுப்பாளர் கே.இ.பிரகாஷ் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெறும் இளைஞர்களுக்கு பண விருதுகள் (ஒவ்வொரு வகையிலும்) மொத்த ரொக்க விருது: ரூ.1,00,000/ ஒட்டு மொத்தமாக: ரூ.50,000/- ஒவ்வொரு வகுப்பும் முதல் 10: நினைவுப் பரிசு, சான்றிதழ், பதக்கம்: ரூ.1,20,000 வழங்கப்பட உள்ளது. இதில் கழக விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் சி.ஆர். இராமச்சந்திரன், கழக விவசாய தொழி லாளர் அணி துணைச் செயலாளர் பா.அருண்குமார், கழக விவசாயி துணைச் செயலாளர் எல்.பி.தர்மலிங்கம், மாவட்ட அவைத்தலைவர் நா.புருஷோத்தமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.ஆர்.சண்முகசுந்தரம், டி.பி.சுப்பிர மணியன், அ.அசரப்அலி, சோமு (எ) த.சந்தோஷ், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.பி. நாகராஜ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வி.சி.ஆறுக்குட்டி, கோவை மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிச் செல்வன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஆ.அசோக், பி.செந்தில், எஸ். ஜெயந்தி, பொருளாளர் எஸ். அப்துல் ரகுமான், மாவட்ட கவுன்சிலர் இ.ஆனந்தன், தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினர் ஆர்.நடராஜன், நகரக் கழக முன்னாள் செயலாளர் எம்.அப்துல் ஹமீது உள்பட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொள்கின்றனர்.

### 2024 – நாடாளுமன்ற தேர்தல்



## தேர்தல் பணி (வாக்குச்சாவடி) ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்!

**மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!**

நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை, குன்னூர், கூடலூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் தலைமை கழக அறிவுறுத்தலின்படி மாவட்ட கழகத்தால் தொடர்புடைய நகர ஒன்றிய - பேரூர் கழக செயலாளர்கள் பரிந்துரையின்பேரில் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் கீழ்குறிப்பிட்டுள்ள பட்டியலின்படி, தேர்தல் பணி செயலாளரும், சுற்றுலாத்துறை அமைச்சருமான கா.ராமசந்திரன் முன்னிலையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் கு.கருணாநிதி (உதகை), பி.டி.பாண்டிச் செல்வன் (குன்னூர்), பல்லவிராஜா (கூடலூர்) ஆகியோர் தலைமை கழக பிரதிநிதிகளாக கலந்துகொள்ள உள்ளனர்.

| நாள் / நேரம் | சட்டமன்ற தொகுதி | இடம் வருமாறு |
|---|---|---|
| 30.1.2024 (செவ்வாய்) காலை 11 மணி | 108 - உதகை | மாவட்ட கழக அலுவலகம், உதகை. |
| 31.1.2024 (புதன்) காலை 11 மணி | 110 - குன்னூர் | விவேக் டூரிஸ்ட் ஹோம் கூட்ட அரங்கம், குன்னூர் |
| 1.2.2024 (வியாழன்) காலை 11 மணி | 109 - கூடலூர் | சாஸ்தாபுரி கூட்ட அரங்கம், கூடலூர் |

மேற்குறிப்பிட்டுள்ள தேதிகளில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழுபொதுக்குழு உறுப்பினர்கள், நகரஒன்றியபேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

**பா.மு.முபாரக்**
செயலாளர் - நீலகிரி மாவட்ட தி.மு.க.

### தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் அறிஞர்களுக்கு

# தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் இலக்கிய மாமணி விருது!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜன. 26-

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புகளைக் கொண்டு, சீரிளமையோடு இலங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் தமிழ்த் தாயின் அறிஞர் பெருமக்களுக்குத் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக பல்வேறு விருதுகளையும் சிறப்புகளையும் வழங்கி, அவர்தம் புலமைக்கும் தொண்டுக்கும் பெருமை சேர்த்து வருகின்றது. அவ்வகையில் மரபுத் தமிழ், ஆய்வுத்தமிழ், படைப்புத் தமிழ் ஆகிய வகைப்பாட்டில் மூன்று அறிஞர்களுக்கு ஆண்டு தோறும் உயரிய விருதான இலக்கியமாமணி விருது வழங்கப்பட்டு வருகிறது. இலக்கியமாமணி விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் ஐந்து இலட்சத்திற்கான காசோலை, ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை அளித்தும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பு செய்யப்பெறுவார்கள்.

இலக்கிய மாமணி விருது 2022ஆம் ஆண்டிற்கு கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் **அரங்க. இராமலிங்கம்** (வயது 68) (மரபுத்தமிழ்), விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த **கொ.மா.கோதண்டம்** (வயது 83) (ஆய்வுத்தமிழ்), கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த **முனைவர் சூர்ய காந்தன்** (மா.மருதாச்சலம்) (வயது 67) (படைப்புத்தமிழ்) ஆகியோர்தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு நேர்வாக நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி **மணி அர்ஜீணன்** (வயது 70) (மரபுத்தமிழ்), திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த **அர. திருவிடம்** (வயது 77) (ஆய்வுத் தமிழ்), சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த **க.பூரணச்சந்திரன்** (வயது 74) (படைப்புத்தமிழ்) ஆகியோர் தெரிவு செய்யப் பெற்றுள்ளனர்.

2023ஆம் ஆண்டிற்கு இலக்கியமாமணி விருதிற்கு கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த **ஞா.மாணிக்கவாசகன்** (வயது 94) (மரபுத்தமிழ்), திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பேராசிரியர் **சு. சண்முக சுந்தரம்** (வயது 73) (ஆய்வுத்தமிழ்), சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த கவிஞர் இலக்கியா **நடராசன் (எ) ச.நடராசன்** (வயது 64) (படைப் புத்தமிழ்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட் டுள்ளது.



தைப்பூசத்தை முன்னிட்டு. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கந்தகோட்டம், கந்தசாமி திருக்கோயிலில் நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். உடன் இணை ஆணையர்கள் ச.இலட்சுமணன் திருமதி ஜ. முல்லை திருக்கோயில் செயல் அலுவலர் ஆ.குமரன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரையில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் வெற்றி பெற்ற சிறந்த காளைக்கும், சிறந்த மாடுபிடி வீரருக்கும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சார்பாகவும் தலா ஒரு சொகுசு ஜீப் மற்றும் தமிழ்நாடு அரசின் சார்பில் தலா ஒரு லட்சத்திற்கான காசோலையையும் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வாழ்த்தி பரிசுகளை வழங்கிய போது எடுத்த படம். உடன் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் மற்றும் அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் உள்ளனர்